**செய்தி வெளியீடு எண்: 484** **நாள் : 24.09.2014**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.9.2014 அன்று தலைமைச் செயலகத்தில், ஆப்ரிக்க நாடான துனீஷியாவில் சமீபத்தில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான அழைப்பு சர்வதேச தடகளப் போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 பாராலிம்பிக் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு 7 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கினார்கள்.

விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக தமிழநாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூட ஏதுவாக, தமிழகத்தைச் சேர்ந்த திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உயரிய பயிற்சி அளித்தல், உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு மையங்கள் அமைத்தல், விளையாட்டு விடுதிகளைக் கட்டுதல், போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றி பெறும் வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு சிறப்பான திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலானஅரசு செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழகத்தில் முதன்முறையாக 2014—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மதுரையில் 45 லட்சம் ரூபாய் செலவில் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும், சீனாவில் 2010—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பாரா ஆசிய சக்கர நாற்காலி வாள்சண்டை போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற விளையாட்டு வீரருக்கு 10 லட்சம் ரூபாய் ஊக்கத் தொகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வழங்கப்பட்டது.

ஆப்ரிக்க நாடான துனீஷியாவில் 2014—ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 முதல் 19 வரை நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான அழைப்பு சர்வதேச தடகளப் போட்டிகளில் பங்கேற்ற தமிழகத்தைச் சேர்ந்த 7 பாராலிம்பிக் விளையாட்டு வீரர்கள் மற்றும்

வீராங்கனைகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலம் தலா 30 ஆயிரம் ரூபாய் ஏற்கெனவே வழங்கப்பட்டது.

இந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்களது இருவழி விமான பயணக் கட்டணம், நுழைவுக் கட்டணம், விசா கட்டணம், காப்பீட்டுக் கட்டணம், கையாளுதல் கட்டணம் போன்ற செலவினங்களுக்காக தலா 1 லட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவு செய்துள்ளதாகவும், தங்களுக்கு மொத்த தொகையை வழங்க வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த கோரிக்கையினை கனிவுடன் ஏற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் வழங்கிட உத்தரவிட்டிருந்தார்கள்.

அதன்படி, ஆப்ரிக்க நாடான துனீஷியாவில் நடைபெற்ற அழைப்பு சர்வதேச தடகளப் போட்டிகளில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராலிம்பிக் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளான திரு எஸ். குருநாதன், திருமதி பி. ராசாத்தி, திருமதி சி. பூங்கொடி, திரு கே.ஜே. அந்தோணி, திரு கே. சாந்தமுத்துவேல், திரு பி. படைத்தலைவன், திரு எஸ். திருமலைக்குமார் ஆகிய 7 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு சிறப்பினமாக தலா ஒரு லட்சத்து 9 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 7 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து நிதியுதவியினை பெற்றுக் கொண்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த பாராலிம்பிக் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஆப்ரிக்க நாடான துனீஷியாவில் நடைபெற்ற அழைப்பு சர்வதேச தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ள ஏற்பட்ட செலவினங்களை முழுமையாக கருணை உள்ளத்தோடு வழங்கியமைக்காக தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். சுந்தரராஜ், தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு முகமது நசீமுத்தின், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் முதன்மைச் செயலர் / உறுப்பினர் செயலர் திரு வி.கு.ஜெயக்கொடி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள்: 24.9.2014